**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க..எண்.5398/ஆ5/2025, நாள்.30/10/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை – காலநிலை கல்வியறிவு – சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் சார்ந்து வினாடி வினா – நடத்துதல் – தொடர்பாக

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணி) செயல்முறைகள் ந.க.எண்.032844/ எம்1/இ1/2024, நாள். 25.10.2025

.....

மாண்புமிகு நிதித்துறை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்கள், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில், "தமிழ்நாடு அரசு காலநிலைக் கல்வியறிவினை ஒரு இயக்கமாக முன்னெடுத்து, பள்ளிகளில் சூழல் மன்றங்களை விரிவுபடுத்துதல், பள்ளி மாணவர்களுக்கான இயற்கை முகாம்கள் மற்றும் மாநில அளவிலான பல்வேறு போட்டிகள் போன்றவை நடத்தப்படும்." என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணி) அவர்களின் செயல்முறைகளில், அனைத்து பள்ளிகளிலும் காலநிலைக் கல்வி குறித்த விழிப்புணர்வினை 6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களிடையே ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக காலநிலை கல்வியறிவு மற்றும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை பள்ளி மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வகையில் வினாடி வினா போட்டியினை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தவும், காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு 6 முதல் 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு "சூழல் அறிவோம்" என்னும் தலைப்பின் கீழ், மாநில அளவிலான வினாடி வினா போட்டி நடத்துவதற்கு தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் முன்மொழிந்துள்ளது.

எனவே, மாநில அளவில் நடைபெறவுள்ள இந்த வினாடி வினா போட்டியில் பங்கேற்கும் பள்ளிகள் www.tackon.org.soozhal என்ற இணையதளத்தில் பதிவுகள் மேற்கொள்ள வேண்டும். இணைப்பு 1–(ல்) கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி குறிப்பிடப்பட்டுள்ள காலகெடுவிற்குள் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பதிவு செய்யப்பட்ட பள்ளிக்கு மின்னஞ்சல் மூலம் போட்டியில் கலந்துக்கொள்வதற்கான மின்இணைப்பு (link) அனுப்பப்படும். இந்த மின்இணைப்பின் (link) மூலம் போட்டி நடைபெறும் நாளன்று கலந்து கொள்ள வேண்டும். இந்த போட்டியின் முதல் மூன்று சுற்றுகள் இணைய வழியாக (online) நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வினாடி வினா போட்டியின் முதற்கட்ட சுற்று 06.11.2025 மற்றும் 07.11.2025 அன்று காலை 9.00 மணிக்குத் தொடங்கி மாலை 5.00 மணிவரை நடைபெறும். இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் முதல் பத்து அணிகள் இரண்டாவது சுற்றில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த சுற்றுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இரண்டாவது சுற்றின் முடிவில் மாவட்டத்திற்கு ஒரு அணி தேர்ந்தெடுக்கப்பட்டு மண்டல அளவில் (Zonal Level) நடைபெறும் சுற்றில் பங்கு பெறுவர். இதற்காக மாவட்டங்கள் அனைத்தும் ஏழு மண்டலங்கலாக பிரிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து சென்னையில் நடைபெறும் இறுதி போட்டிக்கு ஒவ்வொரு மண்டலத்தில் இருந்தும் ஒரு அணி தேர்ந்தெடுக்கப்படும்.

இந்த மாநில அளவிலான வினாடி வினா போட்டியில் பங்கேற்கவுள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில் விரிவான வழிகாட்டுதல்கள் இணைப்பு 1ல் கொடுக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடையே கொண்டு செல்லும் நோக்கத்தில் நடைபெறவுள்ள இந்த வினாடி வினா போட்டியினை செயல்படுத்த மேற்கூறிய அனைத்து வழிகாட்டுதல்களை 6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து அரசு / அரசு உதவிபெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – வழிகாட்டுதல்கள்

30/10/25

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

30/10/25

பெறுநர் –

1. தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்கள்,
   அனைத்து வகை அரசு / அரசு உதவிபெறும் நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி),
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல்–

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.